பொள்ளாச்சி வாசி

ஆசிரியர் P. S. வேலுசாமி

வியாழன் வெளியீடு.

பொள்ளாச்சி, 8-3-51 விலை அரையணா | வெற்றி 4

பொள்ளாச்சி நகர சபைக்கூட்டம்.

2—3—51 மாலை முனிசிபல் ஆபீஸில் வைஸ் சேர்மன் ஸ்ரீ ஏ. ஜே. எஸ். மரியதாஸ் தலைமையில் முனிசிபல் கூட்டம் நடைபெற்றது.

ஆஜர் அங்கத்தினர்கள்.

ஸ்ரீ ஏ. டி. எஸ். சின்னுசாமி செட்டியார்
,, கே. சி. கந்தசாமி பிள்ளை
,, பி. கே. ராமசாமிக் கவுண்டர்
,, பி. எஸ். வேலுசாமி
,, பொன்னுசாமித்தேவர்
,, வி. ஆர். தங்கமுத்து
,, பி. எஸ். சுப்பையன்
,, பி. பாலகிருஷ்ணமூர்த்தி செட்டியார்
,, பி. கே. தர்மலிங்கக் கவுண்டர்
,, பி. கே. திருமூர்த்தி
ஸ்ரீமதி தங்கம் அனந்தராம்

மீன்கரை ரோட்டிற்கு 1950—51 ல் தார் போடும் வேலையை நிறுத்திவிட்டதாக தெரிய வருகிறபடியால் ஷி வேலையை இந்த வருஷத்திலேயே முடிக்க உத்திரவிடும்படி சர்க்காரைக் கேட்டுக்கொள்வதென கமிஷனரின் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.

சிறிய குழந்தைகளுக்கு இலவச பால் சப்ளை செய்வதை ஆரம்பிப்பதின் நிமித்தம் தேவையான சாமான் வாங்க ரூபாய் 284-0-0 சாங்ஷன் செய்யப்பட்டது.

வேளாளர் வீதியில் தார் போட ரூபாய் 3330-0-0 ம், கூட்ஷெட் ரோடு ரிப்பேருக்கு ரூபாய் 1000-0-0க்கு எஸ்டிமேட்டும் சாங்ஷன் செய்யப்பட்டது. சாமையர் வீதியில் பப்ளிக் டேப் ஏற்படுத்த தேவையான சாமான்கள் சொந்த செலவில்சப்ளை செய்ய ஸ்ரீ சுப்பே கவுண்டர் சம்மதித்திருப்பதால் டேப் வைக்க முடிவுசெய்யப்பட்டது.

ஏ. பி. டி. வர்க்ஷாப் காம்பவுண்டில் ட்ரான்ஸ்பார்மர்க்கு பிளாட்பாரம் கட்ட எஸ்டிமேட் ரூ. 500-ம், கோயமுத்தூர் ரோடில் ட்ரான்ஸ்பார்மர்க்கு காம்பவுண்டு சுவர் கட்ட எஸ்டிமேட் ரூ. 1250-0-0ம் சாங்ஷன் செய்யப்பட்டது. தெப்பக்குளம் மோட்டார் பம்ப்செட் மூலம் தண்ணீர் சப்ளை செய்ய லாரி ஒன்றுக்கு வாடகை ரூ. 1-ம், மாட்டு வண்டி ஒன்றுக்கு அணா 2-ம் வசூலிக்க முடிவு செய்யப்பட்டது. தேர்முட்டியில் கட்டப்பட்ட காய்கறி மார்கட்டில் இப்போது 4-ஸ்டால்கள் கட்டுவதிலிருந்து தொடர்ந்து கட்ட அங்கீகாரம் கொடுக்கப்பட்டது.

பார்க்கில் அதிகப்படி மூன்று விளக்குகள் போட முடிவுசெய்யப்பட்டது. பெண்கள் ஆஸ்பத்திரிக்கு மீன் எண்ணை சப்ளை செய்ய முடிவு செய்யப்பட்டது. கூட்ஷெட் ரோடு விஸ்தரிப்புக்காக நிலத்தை ரூ. 12613-2- விலைக்கு கொடுப்பதாக ரயில்வே மானேஜர் தெரிவித்ததால் அதை வாங்க முடிவு செய்யப்பட்டது. ஹரிஜன ஹாஸ்டல் கட்ட, அவர்கள் கேட்டிருந்த நிலம் கொடுக்க இயலாதெனவும், மற்றும் பல விஷயங்கள் முடிவு செய்யப்பட்டன. கூட்டம் முடிந்தவுடன் ஸ்ரீ என். மகாலிங்கம் தேநீர் விருந்து நடத்தினர்.

ரேஷன் கார்டுகள் விஷயமாக வருபவர்கள்

காக்கவைத்து இழுக்கடிக்கலாகாது.

ரேஷனிங் அதிகாரிகளுக்கு சர்க்கார் உத்திரவு.

ரேஷன் கார்டுகள் வாங்கிக்கொள்ளவோ அல்லது அவைகளில் மாறுதல் செய்து கொள்ளவோ வருபவர்கள் நாள் பூராவும் காக்கவைக்கப்படுவதுடன் நில்லாமல் ம[illegible] நாளும் வரும்படி சொல்லப்படுவதாக சி[illegible] புகார்கள் சர்க்கார் கவனத்திற்கு வந்திரு[illegible]கின்றன.

இம்மாதிரி புகார்களுக்கு இனி இடம[illegible]க்காமல் வருபவர்களின் அலுவல்களை உடனுக்குடன் முடித்துத் தரவேண்டும் என்று நகர ரேஷனிங் அதிகாரி (சென்னை) இதர ரேஷன் அதிகாரிகள் உதவிரேஷ[illegible] அதிகாரிகள் முதலியவர்களுக்கு சர்க்கா[illegible] உத்திரவிட்டிருக்கின்றனர். அதிககூட்ட[illegible] இருக்கும் நாள்களில் சீக்கிரம் அனுப்பு[illegible]தற்கு முக்கியமான "கௌண்டர்"களி[illegible] ஒரு குமாஸ்தா அதிகப்படியாக வே[illegible] செய்யச் சொல்லவேண்டும் என்றும் சர்[illegible]கார் உத்திரவிட்டிருக்கின்றனர். (தினமணி)

ஸ்கூல் கட்டணம்.

முனிசிபல் கவுன்ஸிலில், செகண்டரி பாடசாலைகளில், கீழ்க்கண்டவாறு பிரத்தியே[illegible] கட்டணங்கள் விதிக்க சர்க்கார் உத்திரவுப்படி முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

	ஆண்கள் உயர்நிலை & மத்தியதரப் பாடசாலைகள்		பெண்கள் உயர்நிலைப்பள்ளி.	
	I to III F.	IV to VI F.	I to III F.	IV to VI F.
1 அட்மிஷன் பீஸ்	0 8 0	0 8 0	0 8 0	0 8 0
2 லைப்ரெரி பீஸ்	1 0 0	1 8 0	0 8 0	1 0 0
3 லிட்டரரி அசோசியேஷன் பீஸ்	ஏற்கெனவே விதிக்கப்பட்டது		1 8 0	2 0 0
4 விளையாட்டுக் கட்டணம்				
நீண்ட காலம்	1 0 0	1 8 0	0 12 0	1 2 0
குறுகிய காலம்	0 8 0	1 0 0	0 6 0	0 12 0
5 சயன்ஸ்	—	0 12 0	—	0 8 0
6 நிதர்சனக் கல்வி பீஸ்	0 8 0	1 0 0	0 8 0	1 0 0
7 கைத்தொழில் பீஸ்	1 0 0	1 0 0	1 0 0	1 0 0
8 ஸ்டேஷனரி	1 0 0	1 8 0	1 0 0	1 8 0

செல்வாக்கு மிகுந்த தமிழ் வாரப்பத்திரிக்கை.

பொள்ளாச்சி வாசி

பொள்ளாச்சி 8—3—51. வியாழன்.

மார்க்கட் ரோடு.

நம் நகரிலுள்ள மார்க்கட் ரோடானது (மீன்கரை ரோடு) எல்லா ரோடுகளைக் காட்டிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அதிகமான போக்குவரத்துள்ளது. சந்தைக்கு அருகில் இருக்கிறது. இந்த ரோட்டில்தான் அதிகமான தூசித் தொந்திரவு. இதனால் பல வியாதிகள் கூட உண்டாகிறது. சுமார் 12-வருஷகாலமாக இந்த ரோட்டிற்குத் தார் அல்லது சிமெண்ட் போடும்படி சர்க்காரை நம் நகர சபை கேட்டுவருகிறது.

நகரிலுள்ள எல்லா முக்கியரோடுகளுக்கும் தார் போட்டாகி விட்டது. இந்தஒரு ரோட்டிற்கு மட்டும் வேலை துவங்குவதை ஹைவேஸ் இலாக்கா தள்ளிப்போட்டுக் கொண்டேபோகின்றனர். இந்தரோட்டை உடனடியாய் எடுத்துச் செய்யும்படியும், அதற்கு ஏற்படும் சிலவில் கால் பங்கு தொகையை நகர சபையார் சர்க்காருக்கு கொடுப்பதாகவும்கூட சொன்னார்கள். அல்லது ரோட்டை முனிசிபாலிட்டிக்கே கொடுத்து விடும்படியும் கோறினர்.

இது சம்பந்தமாக சென்னைக்குத் தூது சென்று மந்திரி முதலானவர்களையும் பார்த்துக் கேட்டனர். கடைசியாக 1951-ல் சர்க்கார் இந்த ரோட்டிற்கு தார் போடுவதாக இருந்தது. ஆனால் இப்போது முனிசிபல் லிமிட்டிற்கு மேற்கே 5-மைல் நீளம் சர்க்கார் தார் போடப்போகிறது. இந்த சுமார் 6-பர்லாங் நீளமுள்ள ரோட்டை இவ்வருஷம் செய்வதில்லையாம், என்ன காரணம் என்று தெரியவில்லை. இதற்கு சிலவில் கால் பங்கு தொகை நகரசபை கொடுக்கிறது.

சமீபத்தில் இங்கு வந்திருந்த மராமத்து மந்திரி கனம் ஸ்ரீ எம். பக்தவத்சலம் அவர்களிடம் கூறியபோது கவனிப்பதாக வாக்களித்தார். இப்போதும் நகர சபையில் இந்த ரோட்டை உடனே தார் போடவேண்டுமென்று கோரி சர்க்காரைக்கேட்டுத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். சர்க்கார் உடனடியாய் கவனித்து இவ்வருஷமே இந்த ரோட்டை எடுத்துச் செய்ய வேண்டுகிறோம்.

காங்கிரஸ்.

(சி. என். என்.)

உடையவன் — உழைப்பாளி, என்று பிரிந்து கிடக்கும் இன்றைய சமூகத்தை மாற்றி, சக்திக்கு தக்கவாறு உழைப்பும் தேவைக்குத் தக்கவாறு ஊதியமும், பெறத்தக்க வர்க்க பேதமற்ற சமூகத்தை லட்சியமாகக் கொண்டு அதற்காகப்பாட்டாளி மக்களின் அரசியலை ஸ்தாபிக்கும் பொருட்டு அல்லும், பகலும் அறுபது நாழிகையும் புலிப்பாய்ச்சலோடும் பருந்துபார்வையோடும் சிற்றெறும்பின் சுருசுருப்போடும் தெளிந்த ஞானத்தோடும், உடும்புப்பிடிப்போடும் உழைக்கும் உத்தமர்களைக் கொண்டது காங்கிரஸ்.

சதையைக்கரைத்து எலும்பை முறித்து ரத்தத்தை சுண்டவைத்து தன்னைத் தான் வஞ்சியாமல் சேவை செய்யும் இந்திய வீர வீராங்கனைகளின் உலகறிந்த போர்சாதனம் காங்கிரஸ். முப்பதுகோடி மக்களின் முழுமைக்கும் பொது உடமைஸ்தாபனமாகி, நாடுசுற்றிலுமுள்ள பட்டிதொட்டி, பாளையங்கள், சந்துபொந்து, மூலைமுடுக்குகளிலெல்லாம், தனது கொள்கைகளைக்கொண்டு சென்றிருப்பது காங்கிரஸ். 200-ஆண்டுகளாக இந்திய மக்களைச் சுரண்டிக்கொழுத்துக் கொம்மாளம் அடித்துக்கொண்டிருந்த, சனியனை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மீது இந்திய மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதைத் தெரிவித்து ஏகாதிபத்தியத்தை, மூட்டை முடிச்சுகளுடன் கப்பலேற்றியது காங்கிரஸ்.

மங்காத தேசபக்தியும் விடுதலை ஆர்வமும், சுதந்திர உணர்ச்சியும், தேசீய ஒற்றுமையையும், ஜனசக்திகளைத் திரட்டியவர்களுமடங்கிய பாரத ஜாதியின், நாட்டின் பாட்டாளி மக்களின் குலசொத்து காங்கிரஸ். லட்சக்கணக்காக தேசபக்தர்கள் தங்கள் இன்னுயிரையும், அரும்பொருளையும், பெரும் புகழையும் தத்தம் செய்து சீராட்டிப்பாராட்டி வளர்த்து வந்தது காங்கிரஸ்.

இன்றைய சமூகத்திலுள்ள கொடுமைகளாகிய வறுமை, வேலையில்லாமை, முதலாளி - தொழிலாளி, ஏழை - பணக்காரன், உயர்ந்தவன் - தாழ்ந்தவன் முதலிய கோரங்களை மாற்றி எல்லோரும் சமம். எல்லோரும் இந்நாட்டு மன்னர், என்ற கொள்கையை அமுலாக்குவது காங்கிரஸ். (தொடரும்)

ஊர் வம்பு!

நகரிலுள்ள முனிசிபல் குப்பைத்தொட்டிகளிலிருந்து சிலர் குப்பையைத் திருடிச் செல்வதாக, நமக்கு பல புகார் கடிதங்கள் வந்துள்ளன. புகார் சிலவற்றில் காங்கிரஸ்காரர்கள் திருடிச்செல்கின்றனர், என்கின்றனர். இதை நாம் ஒப்புக் கொள்ள இயலாது. யாரோ சிலர் எடுத்துச் செல்கின்றனர். யாராயிருந்தாலும், தவறு தான். அப்படித் திருடிச் செல்பவர்களுக்குக் காங்கிரஸ் பெயர் சூட்டவேண்டியதில்லை. அப்பேர்ப்பட்டவர்கள் காங்கிரஸ்காரர்களாகமாட்டார்கள்.

ஒரு காலத்தில் முனிசிபாலிட்டியார், குப்பையை வெளியூர்காரர்களுக்கு கொடுத்துவிட்ட சமயத்தில் அக்கம் பக்கத்து காட்டுக்காரர்கள் குப்பை கிடையாமல் மிகவும் கஷ்டப்பட்டனர். அப்போது திருட வேண்டிய அவசியம்கூட ஏற்பட்டது, என்றே சொல்லலாம். இப்போது நகரசபையார் குப்பையை முனிசிபல் சுற்று வட்டாரங்களில் உள்ளவர்களுக்குத்தான் விலைக்கு கொடுப்பது என்ற முடிவிலிருப்பதாகத் தெரிகிறது. அப்படி இருக்க, யாரும் குப்பையை காணாமல் எடுத்துச் செல்லவேண்டிய அவசியமில்லை. முனிசிபல் அதிகாரிகளை நாம் விசாரித்த அளவில், சிலர் குப்பையைஎடுத்துச் செல்வதாகவும் அவர்களை பார்த்தபோதெல்லாம் பிடித்து கேஸ் போட்டு வருவதாகவும், சொல்கின்றனர். பல கேஸ்கள் இன்னும் நடைபெற்று வருகிறது.

முனிசிபல் சொத்து பொதுச்சொத்து நம் சொத்து, இதைக்காணாது எடுப்பது தவறு, என்ற எண்ணம் ஏற்பட்டாலொழிய இது நிற்க வழியில்லை. பொதுஜனங்களுக்கும், கண்காணிப்புவேண்டும். யாரேனும் குப்பை எடுப்பதைப் பார்த்தால் உடனே அதிகாரிகளுக்கு தகவல் கொடுக்க வேண்டும். அவர்கள் அப்படி எடுத்துச் செல்வது தவறு என்று எச்சரிக்கவேண்டும். விலைக்கு வேண்டிய அளவு குப்பை கிடைக்கத்தயாராய் இருக்கும்போது இப்படி காணாது எடுத்துச்செல்வது வேண்டாமென்று நாமும் எச்சரிக்கிறோம்.

எழுத்தறியாமையை அகற்ற வயது வந்தோர் அனைவரும் முதியோர் பள்ளியில் கல்வி பயிலுங்கள்.

பெண்கள் பள்ளி விழா.

3-3-51 ல் நகர் பெண்கள் உயர்தர பள்ளியில் முதல் வருஷ விளையாட்டு போட்டிவிழா நடைபெற்றது. ஆரம்பத்தில் ஸ்ரீமதி கமலாசேஷாஸ்த்திரி தேசியக் கொடி ஏற்றுவித்தார். விழாவிற்குதலைமை தாங்கிய ஸ்ரீமதி ஜெயராஜன் அவர்கள் பேசும்போது விழாபோட்டிகளில் கலந்து கொண்ட மாணவிகளைப் பாராட்டி பெண்கள் இம்மாதிரி விழாக்களில் அதிகம் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும் என்றார்.

"பொள்ளாச்சி வாசி" பத்திரிகையில் காங்கிரஸ் என்ற தலைப்பில் நேதாஜியின் சேவையைக் குறிப்பிட்டிருப்பதாகவும், நேதாஜி ஐ. சி. எஸ். வேலையை தியாகம் செய்துவிட்டு காங்கிரஸில் வேலை செய்ததோடு மட்டுமல்ல பெண்களை போராட்டத்தில் ஈடு படுத்தினர். இந்தியப்பெண்கள் கையில் துப்பாக்கி தாங்கி போர் புரியும் உற்சாகத்தையும் கொடுத்தார் என்றும், கூறினர்கள். கூடுமானவரை ஆங்கிலத்தை விட்டு, தமிழில் பேசிப் பழகும்படியும், கேட்டுக்கொண்டார்கள். பலவிதப் போட்டிகள் நடைபெற்றன. போட்டியில்வெற்றி பெற்றவர்களுக்கு ஸ்ரீமதி கிருஷ்ணவேணி ராமலிங்கம் பரிசுகள் வழங்கினர்.

பரிசு பெற்றவர்கள்:— சரஸ்வதி, மேரி சின்னக்கண்ணு, அலமேலு, சுந்தரி, பாக்கியம், தங்கம், பானுமதி, சாந்தா, லோசனு வள்ளியம்மாள், சரஸ்வதி, தங்கம், ஜோதி சரஸ்வதி, நவநீதம், சரஸ்வதி, மாரிமுத்து, நாகரத்தினம் சிவகாமி, சாந்தா, மயிலாத்தாள், செல்லாம்பாள், கில்டா, ப்ளோரா, கில்டா மேரி (டீம்), மீனும்பிகா (டீம்) கண்ணும்பாள், விஜயா, மேரி, பேபி ருக்மணி, சத்தியபாமா, சுலோசனு, ஜெயா கிருஷ்ணவேணி, ஜெயம்மா, அம்முகுட்டி முதலியோர் ஆவர்.

ஏ பி. டி. அக்கினி சட்டி.

ஏ. பி. டி. ஆபீசிலிருந்து பூவோடு ஊர்வலம் முக்கிய தெருக்கள் வழியாய் வந்து மாரியம்மன் கோவிலை அடைந்தது. விழாவில் பலதரப்பட்ட வாத்திய கோஷ்டிகளுடன் (பம்பை, நாதஸ்சுரம் தப்பட்டை) கரகம் மயில் டான்ஸ் வடுகபாளையம் முத் தமிழ் வளர்ச்சிக் கழக நாடக குழுவினரின் இன்னிசை விருந்தும் நடைபெற்றது அலங்கரிக்கப்பட்ட ரதம் அம்மன் சிலையுடன் தொடர்ந்தது. இசைவிருந்தில் வெங்கடேச ஐயர், வெங்கிடுசாமி செட்டியார், நடராஜ், வெள்ளிங்கிரி, சடையப்பா, நாச்சிமுத்து ஆறுமுகம் மற்றும்வெளியூர் பாடகர்களும் கலந்து கொண்டனர்.

ஹாஸ்டல் கூட்டம்.

ஹரிஜன ஹாஸ்டல் கூட்டம் தலைவர் ஸ்ரீ யு. கே. ஷண்முகம் செட்டியார் தலைமையில் நடைபெற்றது. டிசம்பர், ஜனவரி பிப்ரவரி மூன்று மாத சிலவு ரூபாய் 1113-12-0 ம் அங்கீகரிக்கப்பட்டது. அடுத்த 3-மாதத்திற்கு ரூ. 1050—0—0 சிலவுக்கு அனுமதிக்கப்பட்டது. தீபாவளிக்கு மாணவர்களுக்கு ரூ. 197—0—0 துணிவாங்கி அளித்த ஸ்ரீ பி. நாச்சிமுத்து கவுண்டருக்கு வந்தனம் தெரிவிக்கப்பட்டது. தலைவரையே கன்வீனராகக்கொண்ட கட்டிடக் கமிட்டி அமைக்கப்பட்டதோடு தேநீர்விருந்தும் அளிக்கப்பட்டது

நேர்த்தியான சாப்பாடும்!
சுவை மிக்க பிரபாணியும்!
சுகாதாரமுறைப்படி தயாரிக்கும் கடை:
பட்கல் இஸ்லாமியா,
ஓட்டல் & டீ கிளப்,
P. A. மகமத்கோயா & பிரதர்,
மார்கெட் ரோடு,
பொள்ளாச்சி.

தரத்தில் உயர்ந்தது
Ambika
TRADE MARK
TOOTH POWDER
அம்பிகா பல் பொடி
MFG. DR. A. PERUMAL POLLACHI.
வாங்கி உபயோகியுங்கள்.

"நேயர்களே! கேள்வி பதில் பகுதி ஆரம்பிக்கப்படும். அரசியல் சம்மந்தமாகக் கேளுங்கள்."

விஜயா டைமண்ட்ஸ்.
ஒரிஜினல் ரங்கூன் கமலங்கள்,
திருச்சி கமலங்கள், நீலம்,
சிகப்புமுதலிய கற்களும், சீமை
அரம், வாள்தகடு முதலிய எல்லா
விதமான பட்டறை சாமான்களும்
கிடைக்கும்.
R. கிருஷ்ணன்.
ஷராப் வியாபாரம், எஸ். எம். ஜோசியர்
தெரு, பொள்ளாச்சி.

6—3—51 முதல் எமது மகத்தான ஆரம்பவிழா!
தினசரி மூன்று காட்சிகள்.
பகல் 2-30, மாலை 6-30, இரவு 10 மணி.

நாராயணு டாக்கீஸில்,
1951-ம் ஆண்டின் தலைசிறந்த படம்.
பொள்ளாச்சி. ராஜா பிலிம் ரிலீஸ்.
அஞ்சலிதேவி, முக்கமல,
ஜி. வரலட்சுமி கிருஷ்ணமூர்த்தி
நிரபராதி
தமிழ் சமூகப் படம்.
காலம், சட்டணம் வழக்கம்போல்.

தபால் பெட்டி நெ. 25.

N. P:— ரெடிமேடு பவுன் நகைகள் உத்திரவாதத்துடன் கிடைக்கும்.

Prop: B. பாலமாணிக்கம் செட்டியார் & பிரதர்ஸ்.

போன் நெம்பர். 63.

உலகப் பிரசித்தி பெற்ற பல்லடம்

உரிமையாளர்:

P A ரஹீம் சாயபு,

பல்லடம்.

ஏஜண்ட்:

A K யாகூப்சாயபு

பொள்ளாச்சி.

குயில் மார்க் பீடிகளையே வாங்கி

உபயோகியுங்கள்.

Edited & Published by P. S. Veluswamy, Printed at the Sri Devi Press, Rajamill Road, Pollachi.